உ

சிவமயம்



புங்குடுதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பாரிஸ், பிரான்ஸ் பகுதியை
தற்போதைய வதிவிடமாகக் கொண்டு வசித்து வந்தவருமாகிய

அமரர். உயர்திரு. **ஐயம்பிள்ளை பாலசிங்கம்**

அவர்களின் சிவப்பதப்பேறு குறித்த

# நினைவு மலர்

மார்ச் 25, 2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சமர்ப்பணம்

எங்கள் தந்தையே தீபமே

விண்ணவர் வாழ்த்த, மண்ணவர் போற்ற

புகழ்சொல் மட்டும் கேட்டு

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவர் நீங்கள்

இன்று எம்மையெல்லாம் ஆளாத்துயரில் ஆழ்த்தி விட்டு

மீளாத்துயரில் கொண்ட எமது அன்புத் தெய்வமே

உங்கள் மலர்ந்த முகத்தை நாம் காண்பதெப்போ

அன்பு, பண்பு, இரக்கம், கொடை கொண்ட நின் வழியே

என்றும் நாம் பின் தொடரும் பாதை

இந்த மலரை தெய்வத்துள் தெய்வமான

தங்கள் திருப்பாதங்களில்

சமர்ப்பித்து வணங்குகிறோம்

இனிமேல் என்றும் உங்கள் நினைவுகளுடன் மட்டும்

குடும்பத்தினர்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அமரர். உயர்திரு. ஐயம்பிள்ளை பாலசிங்கம்

அன்னை மடியில்:
**08-04-1944**







ஆண்டவன் அடியில்:
**23-02-2009**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு சர்வதாரி அணையா மாசித்திங்களில்
பூண்ட அபரபக்க பொலிவான சதுர்தசியில்
நீண்ட பெரும்புகழான் நிறைவான ஐயம்பிள்ளை
ஈண்ட பெருமகனாம் எடுப்பான பாலசிங்கம்
இறைவனடி சேர்ந்த தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

வாக்குண்டாம் நல்ல மணமுண்டாம்
மாமலரான் நோக்குண்டாம் மேனி நுடங்காது -
பூக்கொண்டு துப்பார் திருமேனித் தும்பிக்கை
யான்பாதம் தப்பாமற் சார்வார் தமக்கு

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரம்

(திருநாவுக்கரசர் அருளியது)

விறகிற் நீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே

# திருவாசகம்

நாயிற் கடைப்பட்ட நம்மையுமோர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத் தாண்டானென் வல்வினையின்
வாயிற் பொடியட்டிப் பூவல்லி கொய்யாமோ.

# திருவிசைப்பா

(கருவூர்த்தேவர் அருளியது)

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ? அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

# திருப்பல்லாண்டு

(சேந்தனார் அருளியது)

சீரும்திருவும் பொலியச் சிவலோகநாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவுபெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊருமுலகுங் கழறவுழறியுமை மணவாளனுக் காட்
பாரும் விசும்புமறியும் பரிசுநாம் பல்லாண்டுகூறுதுமே.

# திருப்புராணம்

(சேக்கிழார் அருளியது)

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் - உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் - மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுஉன் அடியின்கீழ் இருக்க வென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

(அருணகிரிநாதர் அருளியது)

இறவாமற் பிறவாம லெனையாள்சற் குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க - மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

# பட்டினத்தார் பாடல்

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி ஏகம்பனே.

அன்னை எத்தனை எத்தனை அன்னையோ
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ
பின்னை எத்தனை எத்தனை பெண்டிரோ
பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ
முன்னை எத்தனை எத்தனை சென்மமோ
மூடன் ஆய்அடி யேனும் அறிந்திலேன்
இன்னம் எத்தனை எத்தனை சென்மமோ
என்செய் வேன்கச்சி ஏகம்ப நாதனே.

என்செயல் ஆவது யாதுஒன்றும்
இல்லை இனித்தெய்வமே
உன்செயலே என்று உணரப்பெற்
றேன்இந்த ஊன்எடுத்த
பின்செய்த தீவினை யாதுஒன்றும்
இல்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோஇங்க
னேவந்து மூண்டதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமியம்மைப் பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
  கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
  கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
  தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும்மாறாத வார்த்தையும்
  தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
  துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உதவிப் பெரிய
  தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
  ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
  அருள்வாமி! அபிராமி யே!

வாடாமல் உயிரெனும் பயிர்தழைத் தோங்கிவர
  அருள்மழை பொழிந்தும் இன்ப
வாரிதியிலே நின்ன தன்பெனுஞ் சிறகால்
  வருந்தா மலேய ணைத்துக்
கோடாமல் வளர்சிற் றெறும்புமுதல் குஞ்சரக்
  கூட்டமுத லான சீவ
கோடிகள் தமக்குப் புசிக்கும் புசிப்பினைக்
  குறையாம லேகொ டுத்து
நீடாழி யுலகங்கள் யாவையும் நேயமாய்
  நின்னுதர பந்தி பூக்கும்
நின்மலீ! அகிலங் களுக்கு அன்னை என்றோதும்
  நீலியென்று ஓது வாரோ?
ஆடாத நான்மறையின் வேள்வியால் ஓங்குபுகழ்
  ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
  அருள்வாமி! அபிராமி யே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் முத்துமாரி

உலகத்து நாயகியே! - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்துமாரி!
உன்பாதம் சரண்புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்துமாரி!
கலகத் தரக்கர்பலர் - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்துமாரி!
கருத்தினுள்ளே புகுந்துவிட்டார் - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்து மாரி!
பலகற்றும் பலகேட்டும் - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்து மாரி!
பயனொன்று மில்லையடி - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்து மாரி!
நிலையெங்கும் காணவில்லை - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்து மாரி!
நின்பாதம் சரண்புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்து மாரி!

துணிவெளுக்க மண்ணுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்து மாரி!
தோல்வெளுக்கச் சாம்பருண்டு - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்து மாரி!
மணிவெளுக்கச் சாணையுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்து மாரி!
மனம்வெளுக்க வழியில்லை - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்து மாரி!
பிணிகளுக்கு மாற்றுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்து மாரி!
பேதைமைக்கு மாற்றில்லை - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்து மாரி!
அணிகளுக்கொ ரெல்லையில்லாய் - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்து மாரி!
அடைக்கலமிங் குனைப்புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா - எங்கள் முத்து மாரி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேசமுத்துமாரி

1. தேடியுனைச் சரணடைந்தேன் தேசமுத்துமாரி!
   கேடதனை நீக்கிடுவாய் கேட்ட வரந்தருவாய்

2. பாடியுனைச் சரணடைந்தேன் பாசமெல்லாங் களைவாய்
   கோடிநலஞ் செய்திடுவாய் குறைகளெல்லாந் தீர்ப்பாய்

3. எப்பொழுதுங் கவலையிலே இணங்கி நிற்பான்பாவி
   ஒப்பியுனதேவல் செய்வேன் உனதருளால் வாழ்வேன்

4. சக்தி யென்று நேரமெல்லாந் தமிழ்க்கவிதைபாடி
   பக்தியுடன் போற்றி நின்றால் பயமனைத்துந்தீரும்

5. ஆதாரம் சக்தியென்றே அருமறைகள் கூறும்
   யாதானுங் தொழில் புரிவோம்! யாதுமவள் தொழிலாம்

6. துன்பமே இயற்கையெனும் சொல்லைமறந்திடுவோம்
   இன்பமே வேண்டிநிற்போம் யாவுமவள் தருவாள்

7. நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத்தீர்ப்பு
   அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிகவரம் பெறலாம்!

❋ ❋ ❋ ❋ ❋

# நவராத்திரிப் பாட்டு

### பராசக்தி

மாதா பராசக்தி வையமெலாம் நீ நிறைந்தாய்!
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே
ஏதாயினும் வழிநீ சொல்வாய் எம துயிரே!
வேதாவின் தாயே! மிகப்பணிந்து வாழ்வோமே.

### வாணி (சரஸ்வதி)

வாணி கலைத் தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுத்தைப் போல அறிவுமுத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெலாங்காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஸ்ரீதேவி (இலட்சுமி)

பொன்னரசி நாரணனார் தேவி புகழரசி
மின்னுநவ ரத்தினம்போல் மேனி யழகுடையாள்
அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பாள், ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே.

### பார்வதி (துர்க்கை)

மலையிலே தான் பிறந்தாள் சங்கரனை மாலையிட்டாள்
உலையிலே ஊதி உலகக் கனல் வளர்ப்பாள்
நிலையில் உயர்த்திடுவாள் நேரே அவள் பாதம்
தலையிலே தங்கித் தரணிமிசை வாழ்வோமே.

❋ ❋ ❋ ❋ ❋

## புங்குடுதீவு மாரியம்மன் திருத்தலம்

### விருத்தம்

பூவிலுயர் வளம்மருவு புங்கைநகர்மா னெழுவம்
 பொலிந்த செந்நெல்
கோவில் வயலெழுந்தருளிக் குலமுளையாயெமை
 ஆண்டுகுண்டு பூத்த
காவி மலரனைய திருக்கட் கடையினுலகமெலாங்
 களிக்கக் காக்குந்
தேவி மகா மாரியிரு செம்பதும மலர்ப்
 பதங்கள் சிந்தை செய்வாம்!

### திருத்தலச் சிறப்பு

மண்வளமும் பொன்வளமும் ஒருங்கே பெற்று
மக்களெலாம் ஒற்றுமையாய் வாழும் தீவில்
பெருமக்கள் சிறுமக்கள் என்ற பேதமற்று
பெருமையுடன் வழிகாட்டும் பெருங்காட தனில்
கோவில்வயல் நாயகியாம் மாரியம்மன்
குடிகொண்டு கொலுவிருக்கும் சிறப்பு என்னே!
நாற்புறமும் வளம் கொழிக்கும் செந்நெல் வயல்கள்
நல்மக்கள் செறிந்து வாழும் நடுநாயகியாம்!
கீழ்புறத்தே அழகூட்டும் தெப்பக்குளமாம்
கிளைகள் பல செறிந்து நிற்கும் நிழல் மரங்கள்!
மேற்புறத்தே மெய்யப்பன் ஆலயமாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யடியார் குறைதீர்க்க மிளிர்ந்து நின்றாள்!
உட்புறத்தே சென்று நான் நோக்கி நின்றேன்
ஓங்காரத் தத்துவனாம் ஐங்கரனுக்கு
ஒளிர்வான ஆலயமும் ஓங்கக் கண்டேன்
மயிலேறும் வடிவேலன் மறுபுறத்தே
மற்றுமொரு ஆலயத்தில் அமரக்கண்டேன்
வெள்ளொளியால் திகழ்ந்து நிற்கும் கொடிமரமும்
மேன்மைபெற்று அங்கு இருக்கக் கண்டேன்
மின்னொளியும் தன்னொளியும் மிளிரக்கண்டேன்
மிடுக்கான தோற்றமுடன் தேரும் கண்டேன்
நன்மக்கள் எல்லோரும் நாமம் சொல்ல
நல்லதொரு ஆராய்ச்சி மணியும் கண்டேன்
காவலுக்குத் தெய்வமாய் நிற்கும் அப்பன்
கனிவாக ஒருபுறத்தே நிற்கக் கண்டேன்
தேவியர்க்கு செய்தி சொல்லும் சண்டேஸ்வரிக்கு
சிறியதொரு ஆலயமும் அமையக் கண்டேன்
ஊனமொடு வருகின்ற அடியவர்க்கு
உயர்வளிக்கும் அன்னையவள் ஆறுகின்ற
மண்டபமும் மறுபுறத்தே இருக்கக் கண்டேன்
இன்னபிற அழகோடு எடுப்பாய் உயர்ந்த
பஞ்சதள கோபுரமும் திறக்கக் கண்டேன்
பாங்கான சரித்திரங்கள் பலவும் கண்டேன்
அன்னையவள் அபிராமிப் பட்டருக்கு
அருள்சுரக்கும் காட்சியும் ஒருபுறமாம்
மன்னுமொரு மகிடாசுரனை வதைக்கின்ற
காட்சியும் மறுபுறமாம் - தென்னவனாம்
எங்கள் அப்பன் சிவனாருக்கும் தேவியர்க்கும்
நடக்கின்ற திருமணத்தில் - பங்கயத்தில்
அமருகின்ற பிரம்மனோடு - பாற்கடலில்
பள்ளி கொள்ளும் மாலும் நின்று - தூது
பல சொல்லிநிற்கும் நாரதரும் - தூய
பலதேவர்களும் வாழ்த்தி நிற்கும் - என்
உள்ளமதை உருக்குகின்ற காட்சிபல
உருப்பெற்று ஒளிபெற்று இருக்கக் கண்டேன்
மன்னவளே! எங்கள் அன்னை மகாமாரியம்மா
மன்றாடி நிற்கின்றுறேம் தாயே உன்னை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதோஷ வழிபாடு

### பிரதோஷ மகிமை

இறைவனின் பேரருளைப் பெற்று இனிதே வாழப் பலவகையான பூஜைகள் நடத்தப்படுகின்றன. அவற்றுள் மிகச் சிறப்பாகக் கருதப்படுவது பிரதோஷ நாள் வழிபாடாகும். உணவை எப்பொழுது உண்டாலும் பய னுண்டு. ஆனால், அதற்கென்று குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் உண்கின்ற போதுதான் முழுப்பயனையும் அடைய முடியும்.

அதுபோல இறைவனை எப்பொழுது பூஜித்தாலும் பலனுண்டு என்றாலும் சில குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட நேரத்தில் பூஜித்தால் முழுப்பலனை அடைய முடியும் என்பது உண்மையாகும். இது அனுபவத்தால் தெளிவாக அறிந்த ஒன்றாகும்.

பலர் பிரதோஷ வழிபாட்டின்மூலம் பலவகைத் தடைகள் விலகப்பெற்று பெறுதற்கரிய செல்வங்களைப் பெற்று மகிழ்ந்திருக்கின்றார்கள். இவ்வுண் மையைப் புராண வரலாறு நமக்கு விளக்குகிறது.

### பிரதோஷ காலம்

பொதுவாக பிரதோஷகாலம் என்றால், பகல் முடியும் நேரம் தொடங்கி இரவுக்கு அடையாளமாக வானில் சந்திரனும் நட்சத்திரங்களும் தோன்றும் நேரம்வரை என்று கூறுவர். இதை மிகவும் துல்லியமாகக் கணக்கிட்டு மாலை *5.45* மணிக்குமேல் *6.30* மணிக்குள் என்று பிரதோஷ காலத்தைச் சாஸ்திர அறிஞர் குறிப்பிட்டுள்ளனர்.

ஒவ்வொரு மாதமும் அமாவாசையிலிருந்து 13ம் நாளும், பௌர்ணமி யிலிருந்து 13ம் நாளும் திரயோதசி திதியாகும். அன்றுதான் பிரதோஷ நாட்கள் வருகின்றன.

### வழிபடும் முறை

பிரதோஷ நாளன்று அதிகாலை எழுந்திருத்தல் வேண்டும். காலைக் கடன்களை முடித்து சிறப்பாக இறைவன் நாமாவளிகளைக் கூறி பூசித்தல் வேண்டும், எதுவும் உண்ணுதல் கூடாது.

ஆலயம் சென்று லிங்கமூர்த்திக்கும் அம்பாளுக்கும் சிறப்பு அபிஷேகம் ஆராதனை செய்யலாம். எப்போதும் இறைவனையே சிந்தைசெய்ய வேண் டும். சிவபுராணத்தைச் சொல்லிக்கொண்டிருத்தல் மிகவும் நல்லது.

சிறப்பாக நேர்த்திக்கடன் செய்ய விரும்புவோர் ஆலயம் சென்று மாலை யில் சிவபிரானுக்கும் ரிஷபதேவருக்கும் அபிஷேகம் செய்தல் வேண்டும். ரிஷப தேவருக்கு அறுகம்புல்மாலை அணிவிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவினால் அகல்செய்து தூய்மையான பசுநெய்விட்டு விளக்கு எரித்தல் வேண்டும். காரரிசியில் வெல்லம் கலந்து ரிஷபதேவருக்கு படைத்தல் வேண்டும். ரிஷபதேவரின் கொம்புகளுக்கு இடையே பார்த்துச் சிவபிரானைத் தரிசித்தல் வேண்டும்.

பிரதோஷ காலத்தில் மட்டும்,வழக்கமாக வருவதுபோல் ஆலயப் பிரதட்ச ணம் வருதல் கூடாது. அப்ரதட்சணம் வருதல் வேண்டும். இதைச் சோம சூத்ரபிரதட்சணம் என்பர்.

ரி– ரிஷபம்; ச– சண்டிகேசுவரர்; கோ– கோமுகை

ரி,ச,ரி,கோ
ரி,ச,கோ
ரி,ச,ரி

மேலேயுள்ள குறியெழுத்துக்கள் ஒருமுறைவரும் அப்ரதட்சணத்தைக் குறிப்பிடுகிறது. அதாவது இடபதேவரைத் தரிசித்து அங்கு நின்றும் இட மாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து, சென்ற வழியே திரும்பிவந்து மீண்டும் இடப தேவரைத் தரிசித்து அங்கு நின்றும் வலமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்து கோமுகியைக் கடவாது முன்சென்ற வழியே திரும்பிவந்து இடப தேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகத் திரும்பி இடபதேவரைத் தரிசியாது வலமாகச் சென்று கோமுகியைச் சேர்ந்து, அங்கு நின்றும் திரும்பிவந்து இடபதேவரைத் தரிசித்து, திரும்பிவந்து இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து, திரும்பிவந்து இடப தேவரைத் தரிசித்து அவருடைய இரண்டு கொம்பினடுவே பிரணவத்தோடு கூட ஹரஹர என்று சொல்லி சிவபெருமானைத் தரிசித்து வணங்குதல் வேண் டும். இது ஒரு பிரதக்ஷணம் ஆகும். இதுபோல் மூன்று முறை பிரதக்ஷணம் செய்தல் வேண்டும்.

பின்னர் சிவபிரான் உமாதேவியாருடன் ரிஷிபாரூடராய் பிரதோஷநாய கராய் பிரதோஷ காலத்தில் (மணி 5.45 முதல் 6.30 வரை) ஆலயவலம் வரும்போது கண்டு தரிசித்தல் மிகப்பெரிய புண்ணியமாகும்.

வேதபாராயணத்துடன் முதலிலும், திருமுறை பாராயணத்துடன் இரண் டாவதும், நாதசுர மங்கல இசையுடன் மூன்றாவதுமாக மூன்றுமுறை ஆலயவலம் நடைபெறும். இரண்டாவது வலம் வரும்பொழுது இறைவனை யும் இறைவியையும் ஈசான திக்கில் இருந்தருளம்செய்வார்கள். அப்பொழுது காட்டும் கற்பூர ஆரத்தியைக் கண்டு தரிசிப்போர்க்கு மிகுந்த பலனுண்டு. தரிசனம் செய்த பின்னர் வீடு சென்று ஒருவர் இருவருக்கு அன்னமிட்டு பிறகு தாமும் உண்டு பிரதோஷ விரதத்தை நிறைவு செய்யவேண்டும்.

சனிப்பிரதோஷத் தரிசனத்தில் தனிச் சிறப்பும் பலனும் உண்டு. அதை மகாப்பிரதோஷம் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரதோஷ தரிசனப் பலம்

பிரதோஷகாலம் என்றாலே பாவங்களைப் போக்கி நல்ல பலன்களைத் தரும் புண்ணிய காலமாகும். அக்காலத்தில் சந்திர மௌலீசுரரை தரிசிப்பதால் தோஷங்கள் எதுவாக இருந்தாலும் உடனே விலகும். பயவுணர்வு, அச்சம், குழப்பம், தீராப்பிணிகள் மறையும், மனநலம், உடல்நலம், வாக்கு நலம் வளம்பெறும். வருகின்ற செய்திகள் எல்லாம் நல்லதாகவே வரும். மங்கலச் செயல்கள் தொடரும். சாதனைகள் புரிய வாய்ப்பும் வல்லமையும் உண்டாகும்.

❋ ❋ ❋ ❋ ❋

## திருநீற்றுப் பதிகம்

மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர்வாய் உமை பங்கன் திரு ஆலவாயன் திருநீறே.

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதம் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திரு ஆலவாயன் திருநீறே.

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திரு ஆலவாயன் திருநீறே.

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க்கு எல்லாம் பெருமை தருவது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத்தருவது நீறு
சேணந் தருவது நீறு திரு ஆலவாயன் திருநீறே.

பூச இனியது நீறு புண்ணியமாவது நீறு
பேச இனியது நீறு பெரும் தவத்தோர்களுக்கு எல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தமதாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திரு ஆலவாயன் திருநீறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திரு ஆலவாயன் திருநீறே.

எயிலது அட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கியம் ஆவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்து ஆலவாயன் திருநீறே.

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவணம் ஆவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவணம் ஆவது நீறு தத்துவம் ஆவது நீறு
அராவணங்கும் திருமேனி ஆலவாயன் திருநீறே.

மாலொடு அயன் அறியாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பு இடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
ஆலம் அது உண்ட மிடற்று எம் ஆலவாயன் திருநீறே.

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண் திகைப்பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப்பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு
அண்டத்தவர் பணிந்து ஏத்தும் ஆலவாயன் திருநீறே.

ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவாயன் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னன் உடல் உற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரத்துவம் அடைந்த
அமரர் ஐயம்பிள்ளை பாலசிங்கம் அவர்களின்,

# வாழ்க்கை வரலாறு

இந்து மகாசமுத்திரத்தின் முத்தெனத் திகழும் இலங்கைத் திருநாட்டின் வடக்கு மாநிலமாகத் திகழ்வது யாழ்ப்பாணக் குடாநாடாகும். இக் குடா நாட்டின் தென்மேற்காய் இருக்கின்ற தீவுகளில் புங்குடுதீவும் ஒன்றாகத் திகழ்கின்றது.

சைவநன்னெறியும், தமிழ்மொழியும் சிறப்புற்று, சிறந்த கல்விமான்களையும், வர்த்தகர்களையும், பெரும் விவசாயப் பெருமக்களையும் தன்னகத்தே கொண்டது. காலம் காலமாக முன்னோடித் தமிழர்களின் வாழ்விடமாக இத்தீவு விளங்குகிறது. இத்தீவின் மத்தியில் பெருங்காடு என்னும் பெரும் பதியில் அமரர்களான திரு திருமதி ஐயம்பிள்ளை சொர்ணம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனாகப் பிறந்தவரே அமரர் பாலசிங்கம் அவர்கள். இவரோடு ஒரேயொரு சகோதரராக திரு சிவராமலிங்கம் பிறந்தார். இந்த இருவரும் தாய் தந்தையரின் செல்லப் பிள்ளைகளாக வளர்ந்துவந்தனர். பாடசாலைக் கல்வியை கற்றுமுடிந்ததும் தந்தையார் காட்டிய வழியில் கொழும்பு சென்று வர்த்தகத் தொழிலில் ஈடுபடலானார்.

இளமைக் காலத்தில் எடுப்பான ஆண்மகனாகத் திகழ்ந்து உறவினர்களுடன் அன்புடன் பழகிவந்தார். எவரையும் மதித்து பண்புடன் பழகுகின்ற பழக்கம் இவரிடம் இருந்தது. பிற்பட்ட காலத்தில் தாய் தந்தையரின் விருப்பத்தின்படி புங்குடுதீவு இரண்டாம் வட்டாரத்தில் புகழ்பெற்ற சிங்கப்பூர் இராசையா தையல்நாயகி தம்பதிகளின் மூத்த மகளான பத்மாவதியை திருமணம்செய்து கொண்டார்.

இல்லற வாழ்வை இனிதே நடாத்திவரும் வேளையில் தேவகி, வேணுகா, தமிழினி, என மூன்று பெண்பிள்ளைகளையும், தர்சன் என ஓர் ஆண் மகவையும் பிள்ளைச் செல்வங்களாகப் பெற்றெடுத்தார். பிள்ளைகளை அன்போடும் பரிவோடும் வளர்த்து கல்வியறிவினை ஊட்டினார். இவருக்கு மனைவிவழியில் குகதாஸ், யோகநாதன், பத்மநாதன், சண்முகதாஸ் என நான்கு மைத்துனர்களும், செல்வவதி என ஒரு மைத்துனியும் இருந்தனர். எல்லோருடனும் அன்புகாட்டி வாழ்ந்துவந்தார். அவர்களின் எதிர்கால வாழ்வுக்கும் வழிகாட்டி அமைந்தார்.

மூத்தமகள் தேவகிக்கு அனலைதீவைச் சேர்ந்த திரு திருமதி நடராசா ஜெயராணி தம்பதிகளின் மகனான திரு யோகராஜாவைத் திருமணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துவைத்து மகிழ்ந்திருந்தார். முறையே இரண்டாவது மகள் வேணுகாவுக்கு புங்குடுதீவு கிழக்கைச் சேர்ந்த திரு. திருமதி. துரைச்சாமி சொர்ணபத்மாவதி தம்பதிகளின் மகனான ஸ்ரீகுமாரைத் திருமணம் செய்துவைத்தனர்.

அடுத்த மகளான தமிழினிக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு திருமதி காசிலிங்கம் மணி தம்பதிகளின் மகனான ராஜ்குமாரைத் திருமணம் செய்து வைத்தனர். பேரப்பிள்ளைகளாக மதுயன், மிருணன், ரஜிந், ரமீஸ் ஆகியோரைப் பெற்று மகிழ்வுடன் வாழ்ந்து வந்தார். நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியினால் எண்பத்தோராம் ஆண்டு பாரிஸ் மாநகரம் புறப்பட்டு அங்கு வாழ்ந்தார். அங்கும் உறவுகள் நண்பர்களுடன் அன்புடன் பழகிவந்தார். பின்னர் தனது முயற்சியினால் மனைவி பிள்ளைகளை அங்கு அழைத்தார். எதிர்கால நலன் கருதி, பிள்ளைகள் கனடாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடம் பெயர்ந்தனர்.

மூத்த மகளின் விருப்பத்தின்பேரில் அவருடன் அமெரிக்காவில் சில காலம் வாழ்ந்தார். பேரப்பிள்ளைகளிடத்தில் அன்புகாட்டி வாழ்ந்திருந்தார். கனடாவுக்கு வந்து உறவுகளுடன் பழகிச்சென்றார். பாரிசில் வாழ்ந்த காலத்தில் ஆலயங்களுக்குத் தவறாமல் சென்றுவருவார். ஊர் மாரியம்மன் கோவில் தேர்த்திருவிழாவின் பங்குதாரராக இருந்து, திருவிழாவும் செய்து வந்தார். அன்னாரின் இறுதிகாலம் அமெரிக்காவுடன் முடிந்ததை அவர்கூட எண்ணியிருக்கமாட்டார். எவரும்எதிர்பார்க்காதவகையில் இவ்வுலகைவிட்டு இறைவனடி சேர்ந்த செய்தி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்திவிட்டது.

தனது வாழ்நாழில் எங்கோ பிறந்து, வளர்ந்து, இறுதியில் கனடிய மண்ணில், தனது உறவுகள், சுற்றம் சூழ, இறுதிப் பயணத்தை முடித்துக் கொண்டார். எல்லாம் வல்ல அந்த மகாமாரி அன்னாருக்கு ஆத்மசாந்தி கொடுத்து அரவணைக்கட்டும்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி, மக்கள், மருமக்கள் புலம்பல்...

அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, மஞ்சள் குங்குமமிட்டு,
திருமாங்கல்யம் அணிவித்து, அன்று எனது பெண்மைக்கும்
வாழ்க்கைக்கும் அர்த்தம் காட்டியவர் நீங்கள்!
அன்று கரம்பிடித்து வாழ்க்கைப் பாதையை கடந்து சென்றோம்
அப்போது உங்கள் கை கொடுத்த தைரியம் - பாதையில்
தூவிக்கிடந்த முட்களும் பூக்களாய்த் தெரிந்தன...
ஆனால் இன்று நான் நடக்கும் பாதையில் கிடக்கும்
பூக்களும் முட்களாய்க் குத்துகின்றன...

எம் குடும்பத்தின் ஆணி வேரென நீ இருந்தாய்,
நீ சாய்ந்துவிட்டாலும் இன்று நீ விட்டுச் சென்ற
விழுதுகள் என்னைத் தாங்குகின்றன.

புன்னகை முகத்தோடு எம்மையெல்லாம் "செல்வம்" என்று
அழைப்பீர்களே அப்பா... அதையெல்லாம் இனி கேட்பதெப்போ?
விடியலில் உங்கள் வார்த்தை கேட்க உங்களை
துயில் எழுப்ப வந்தோம்... உங்கள் நீண்ட துயில் கண்டு
எம் மனம் உடைந்து போனது அப்பா!

எம் வாழ்விற்கு வழிகாட்டிய தெய்வமே
உங்களுக்கு கடமைகள் பல செய்யக் காத்திருந்தோம்
எந்தக் கடமையும் வேண்டாமென்று சென்றுவிட்டீர்களே அப்பா!
உங்கள் வாழ்க்கைப் பாதைதான் எங்களின் பாதை அப்பா!

உங்கள் பாசத்தின் சுகத்தையும், அன்பின் அரவணைப்பையும்
இனி எப்போ காண்போம் மாமா?
மகனாக எம்மை எண்ணி எமக்கு அன்பு காட்டிய தெய்வமே
அந்த அன்பை இனி எங்கே பெறுவோம்?

உங்கள் இறுதிப்பயணம் காட்டியது நீங்கள் வாழ்ந்த பெரு வாழ்வை...

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

— அன்பகலா,

மனைவி, மக்கள், மருமக்கள்

❋ ❋ ❋ ❋ ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GRAND PA...

Grand Pa we miss you
All your memories stick with us
The time you said your lovely words
And how you played with us
The past days we waited for you
To treat us with a lot of care and love
Now our eyes bring waterfall leading to river
because you had a very long trip up to heaven
You flew away from our beautiful family tree
It took a piece of our hearts away
We sit down and think of you
Why must this happen
We miss you Grand Pa...

*- Grand Kids*

❋ ❋ ❋ ❋ ❋

# உடன்பிறப்பின் உள்ளக் குமுறல்...

என் இனிய உடன்பிறப்பே! என் இதயம் கசங்கிப்பிழிய வழிந்த துளிகளினால் உங்கள் ஆத்ம சாந்திக்கு என் சமர்ப்பணம்.

தோளோடு தோள் நின்ற என் அருமை அண்ணா, அன்பின் பேருருவமே, அரவணைப்பில் தாயுள்ளமே, அறிவுரைப்பின் தந்தைக்கு நிகரே, பொறுமையின் பொக்கிஷமே, பாசத்தின் பிறப்பிடமே, என் இனிய உடன்பிறப்பே மின்னமமல் முழங்காமல் வருகின்ற மழைபோல் சொல்லாமற்கொள்ளாமல் நெடும் பயணம் சென்றதேனோ? திடீர் என்று உங்கள் திடீர் மறைவுச் செய்தி கேட்டதும் செய்வதேதும் அறியாது பேரதிர்ச்சியடைந்தேன். என் குருதியும் சில கணம் உறைந்துவிட்டது போல் பிரமை. என் உள்ளமும் உடலும் பதறுகிறது. கன்றை இழந்த பசுவைப்போல் ஆற முடியுதில்லை. இதிலிருந்து மீள நினைக்கின்றேன்.

ஆனால் மீட்டுவருகிறது சிறுபராயம் தொட்டே நாம் சேர்ந்து பழகிய வாழ்ந்த நிலை.என் இதயத்தில் அருவியாய்க் கொட்டுது நினைவலைகள். நீலத் திரைக்கடல் நித்தமும் தாலாட்ட செங்கதிரவன் எழுந்து பொன்னொளி பரப்ப, இளம் தென்றல் தழுவ, மின்னும் நம் புங்கையூரின் பலவளமும் ஒருங்கமைந்த பெருங்காடென்னும் நம் பிறந்தகம், எங்கள் குலதெய்வம் மாரியம்மன், எழில்மிகு அவ ஆலயம், அதைச் சுற்றிலும் அந்தக் காலங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிந்து பரந்து விளைந்த எம் நெல்வயல்கள் பச்சைப் பசேலென்று காட்சிதரும் தலவிருட்சம் தழைத்தோங்கி வளர்ந்திருக்கும் தாமரைத் தடாக மென புண்ணிய தீர்த்ததலம் அமைந்திருக்கும், சுற்றிவர சிவன் முருகன் பிள்ளையார் ஆலயங்கள் அனைவற்றிலிருந்தும் அதிகாலைவேளை நாற்றி சையும் ஆலயமணி ஓசை நாதம் இசைத்துவரும். எங்கள் வீட்டுக்கருகில் எங்கள் காவல் தெய்வம் ஆதிவைரவர் கோவிலும் வழிபாடும் சிறப்புடனே நடைபெறும், எங்கள் இல்லம் சுற்றி எங்கள் வளவெங்கும் தென்னை, பனை, மா, வாழை, மாதுளை இன்னும் பல பயன்தரு மரங்களும் பூக்கண்டு களுமாயும் காய்கறித் தோட்டங்களுமாய் சோலைபோல் நிறைந்திருக்கும். ஆடுமாடுகளும் கூட இருக்கும். இத்தனைக்கும் எங்கள் தந்தை கொழும்பிலே சொந்தமாக வர்த்தகம் செய்பவர்.

ஊருக்குவரும் நேரங்களில் வளவை வளமாக வளப்படுத்துவார். அம்மா வும் பாட்டியும் நாங்களும் கூடமாட கவனித்துக்கொள்வோம். கற்பகதருவே குடியிருந்ததுபோலிருக்கும், செல்வத்திற்குக் குறைவில்லை, செல்லமாகவே நாமிருவரும் வளர்ந்துவந்தோம். ஓய்வு கிடைக்கும் நேரமெல்லாம் எங்கள் தந்தையார் மணிவாசகப் பெருமான் கூறியதுபோல் சித்தத்துள் தித்திக்கும் தேனே! என்று சித்திக்கும் புத்திக்கும் காரணமான பஞ்சாட்சர மந்திரத்தை அனுதினமும் மனச் செம்மையோடு சொல்லுவார். ஓம் நமசிவாய, ஓம் சிவாய நம என்று உள்ளொளி பரப்பி உலப்பிலா ஆனந்தம் உணர்வில் இறைவனைக் காண்பார். அப்பர் சுவாமிகள் சொன்னதுபோல் அப்படி இறைவனைக் கண்டால் நாம் யார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் இறைவனை அறிந்த பின்,

**"அஞ்சுவது யாதொன்றும் இல்லை**
**அஞ்ச வருவதுமில்லை"** – அப்படி ஓர் தெளிவு பிறக்கும்.

வைகறைப் பொழுதினில் புள்ளினமும் ஆர்ப்பரிக்கும். அந்த நேரம் நாங்கள் எழுந்து காலைக் கடன்களை முடித்து நீராடிவந்து தேவாரப் பாடல்கள் படிப்போம். எங்கள் பாட்டியின் கட்டளை பலத்துப் படிக்கவேண்டும் என்று, நாங்களும் பலத்துப் படிப்போம். ஒவ்வொருவரும் தம் பெற்றோர்களிட மும் மூதாதையரிடமுமிருந்து கற்றுக் கொள்வது ஏராளம் என்பது புலனா கும். எங்கள் பாடல்கள் சுற்றம் சூழல் எல்லாம் கேட்கும். அந்தக் காலங்களில் அநேகமாக எல்லா வீடுகளிலும் காலையும் மாலையும் தேவாரப் பாடல்கள் ஒலிக்கும் சுதந்திரமான ஓர் ஆனந்தமயம். ஊரே திருவிழாக்கள் விளை யாட்டுக்கள், நாடகங்கள் என்று குதூகலித்திருக்கும்.

எங்கள் பாடசாலையில் ஓர் போட்டியில் அண்ணாவை ஆண் அழகனாக தெரிவுசெய்ய எல்லோரும் பாடசாலையில் ஆண் அழகன், கட்டழகன் என்று அழைப்பார்கள், எல்லாம் நினைவில் வந்து நிழலாடுகிறதே. படிப்பை முடித்து அண்ணா நீங்கள் அஞ்சல் அதிபர் பதவிக்குத் தெரிவானீர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் விதி கொழும்புக்குப் போய்விட்டோம். அங்கே தொழில் பார்த்துப் பின் சொந்தமாக வர்த்தகம் செய்தோம். சொந்தக் கடையில் காசுப் பட்டடையில் நீங்கள் உட்கார்ந்திருக்கும்போது குன்றெனெ நிமிர்ந்திருப்பீர்கள்.

மலையென ஒத்த உங்கள் உடலழகாகும். கருணை கொண்ட உள்ளமும் அனைவரையும் கவர்ந்திழுக்கும். சிலசமயம் தெருவுத் தாதாக்களால் நெருங்கவரும் காடையரும் உங்கள் அருகில் நெருங்கிவர மாறிடுவர்.

கவலை ஏதுமின்றி வளமுடன் வாழ்க்கையில் சொந்தபந்தத்தில் மண முடித்து மகிழ்வோடு வாழ்ந்திருந்தோம். வினையின் பயனோ! விதியே எம் இனத்தை என்ன செய்ய நினைத்தாயோ? புலம் பெயர்ந்தோம் புனிதமான எம் பிறந்தகத்தைவிட்டு, உற்றார் பலரையும் பெற்றோரையும் இழந்தோம், உறவுகள் பல அறுக்கப்பட்டோம். உள்ள சுகம் அத்தனையும் பறிக்கப் பட்டோம். விருப்பமில்லாமல் வெறுப்புடனே வெளிநாடு புறப்பட்டோம். காலம் உங்களை பாரினில் மேன்மையான பிரான்சில் பதியவைத்தது.

விதி என்னை சவூதியில் பிழைக்கவைத்து பின் நாட்டுக்கே திரும்பிவிட்டேன். அண்ணா உங்களைப் பிரிந்து வருடம் இருபத்தி எட்டு ஆகிவிட்டது. இருந்தும் பத்தாயிரம் மைல்களுக்கப்பால் பத்திரமாய் குடும்பத்தோடு மேற்குலக நாடுகளில் மகிழ்வோடும் மனநிறைவோடும் வாழ்கின்றீர்கள் என்று அறிந்ததும் என் உள்ளம் மகிழ்ச்சியில் பேருவகை கொள்ளும். உள்ளத்தால் உணர்வுகளால் உங்களுடன் உறவாடுவேன். அந்த சுகத்தில் மனம் ஆறுதலடையும். எப்படியும் என்றைக்காவது நேரில் சந்தித்து பேசும் இனிமை கிடைக்கும் எனக் காத்திருந்தேன், காலம் எங்களைக் கை கோர்க்கும் அன்பின் ஊற்றாக ஆரத் தழுவுவோம் என்று ஆசை பிறக்கும்... ஆனால் அதிஸ்டம் கிடைக்கவில்லை...

அண்ணா உங்கள் இறுதிக் கிரிகைகள் நடைபெறும்போது வேதியர் ஓதும் மறையொலி தொலைபேசிமூலம் நேரிடையாகவே கேட்கும் பேறு கிடைத்தது. சில நிமிடங்கள் கழித்து மின் தகனக் கிரிகை நடைபெறுவதாகத் தகவல் வந்தது. அண்ணா மாமன்னர் சோழர் காலத்து கோவில் சிதை சிற்பம்போல் உங்கள் உருவம் சிதை மின்தீயில் வேகுது என்பதை உணரும்போது என் இதயம் பதைபதைக்கிறது. தாங்கொணாத வதைபட்டு என் இனிய உடன் பிறப்பே இனி எப்பிறப்பில் காண்பேன்? விதியே என்ன செய்ய நினைத்தாய் எம் இனத்தை?

அண்ணர் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

– அன்புத் தம்பி
சிவராமலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான பெரியப்பா...

கம்பீர நடையும் கணீரென்ற பேச்சும்
சிரித்த முகமும் சீரிய பண்பும்
கனிவாம் பார்வையும் கபடமற்ற குணமும்
கட்டான உடலும் களைகொட்டும் சிரிப்பும்
கொள்ளை போனதே பெரியப்பா!

அன்புள்ளமே எங்கள் பெரியப்பா- உங்கள்
பொன்னுடன் தீயினில் பொசிங்கிடும்போது
ஆலையில் அகப்பட்ட கரும்பாக
அங்கமெலாம் துடித்துத் தவித்தோம் பெரியப்பா!

அத்தனை அடைமொழிகளுக்கும் சொந்தக்காரன் நீங்களே...
நீங்கள் மட்டுமே என்பதனை
அக்கினி உண்டபின்பே உணர்ந்தோம் பெரியப்பா!

உங்களோடு நாம் வாழ்ந்த காலம் சொர்க்கமே பெரியப்பா!
உங்களால் கண்ட இன்பத்திற்கு உவமையேது பெரியப்பா!
எழுத எழுத எழுதவேண்டும்போல் தோற்றுகிறதே..
உங்களைப் பற்றி எழுதிட ஏழு பிறப்பும் போதாதே பெரியப்பா!

தேன்மாரி பொழிந்தாற்போன்றதே தெவிட்டாத உங்கள் பேச்சு
மற்றவர் மனதைப் புண்பட வைக்கத் தெரியாதே பெரியப்பா உங்களுக்கு
ஆனால்... இப்போ நிரந்தரமாகப் புண்படுத்திவிட்டீர்களே எமைப் பிரிந்து!

ஊனத்தை மட்டுமே உண்டது உரத்தெரிந்த அக்கினி!
உங்கள் உள்ளத்தை அல்ல...
எலும்பும் தசையினால் ஆனதென்றால் தானே எரிந்திருக்கும்
உங்கள் உள்ளம்!
அன்பினாலான உள்ளம் அக்கினியிலும் வேகாத் தீபமே பெரியப்பா!

பசுமை நினைவுகளுடன் உங்கள்
ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

– அன்புடன்
இந்திரன் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் நிறைந்த மைத்துனன் பாலசிங்கம்...

காலங்கள் கடந்து சென்றாலும் உங்கள் கோலங்கள் எங்கள் நெஞ்சை விட்டு அகலவில்லை. பாலத்தான் என்று அழைத்த வாய்கள் ஓயவில்லை. பண்பு நிறைந்த உங்கள் பழக்கங்களை நாம் இன்றும் மறக்கவில்லை. ஏன் அத்தான் இன்று எம்மைவிட்டு விரைவாகச் சென்றுவிட்டாய் என எண்ண முடியவில்லை. உங்களை நினைக்கும்போது நமது ஊரின் வாழ்க்கையே ஞாபகத்திற்கு வருகின்றது. இளமைக் காலத்தில் நாம் வாழ்ந்த சூழல்கள் எமது நெஞ்சில் நிழலாடுகின்றது. ஐயம்பிள்ளை மாமாவும், மாமியும் எங்கள் நெஞ்சத்தைவிட்டு அகலாத உறவுகள். பள்ளிக்கூடம் செல்லும்போதும் தருமக் குஞ்சியின் கடைக்கு தினமும் செல்லும்போதும் உங்கள் வீட்டுப் பாதை கடந்துதான் செல்லுவோம். மாமியை அடிக்கடி நினைப்பேன். எங்களைக் கூப்பிட்டு உணவு தந்து உபசரித்த காலங்களை நினைத்துப் பார்க்கின்றேன். எங்கள் வீட்டுக்கு வருகின்ற போதெல்லாம் கையில் ஏதோ வொரு சாப்பாடு கொண்டு வருவார். அதுதான் மறக்கமுடியாத உறவு. அதுதான் வாழ்க்கையின் பெரும் நிறைவாக இருந்தது.

நீங்களும், அன்பு மைத்துனர் சிவராமலிங்கமும் செல்லப் பிள்ளைகளா கவே வாழ்ந்தீர்கள். அக்காலத்தில் எந்தவித குறைவுமின்றி வாழ்ந்தீர்கள். பள்ளிக்கூட வாழ்க்கை முடித்து கொழும்பு சென்று தந்தைவழி வியாபாரத் தொழிலில் ஈடுபட்டீர்கள். கொழும்புக்கு நாம் வந்தபோதும் எங்களை உபசரித்து அனுப்பிவைத்தீர்கள். எமது ஊர் மாரியம்மன் கோவில், வைரவர் கோவில் பூசைகளில் பங்குகொண்டு, உங்கள் பங்களிப்புகளையும் தவறாது செய்துவந்தீர்கள். பிற்பட்ட காலத்தில் நீங்கள் திருமணம் செய்த இடமும் எங்கள் உறவுக்குரிய இடமாக அமைந்தது. எல்லோரும் கூடி ஒரு கூட்டு உறவாக வாழ்ந்தோம். நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியினால் வெளிநாடு சென்று வாழநேர்ந்த போதும் உறவோடு தொடர்புபட்டிருந்தோம். மரணம் என்பது எல்லோருக்கும் இயற்கையானதுதான். என்றாலும் உங்களுக்கு இவ்வளவு சீக்கிரத்தில் வருமென யாரும் எதிர்பார்க்கவில்லை. பிள்ளை களோடு பாசமாகவே இருந்தீர்கள். அந்தவகையில் மகளின் வீட்டிலேயே உங்கள் உயிர் பிரிந்துவிட்டது. உங்கள் பாதையைப் பின்பற்றி, பிள்ளைகளும் எங்களோடு பண்பாகப் பழகுவார்கள். அவர்களுக்கு எதைச்சொல்லி ஆறு தல் படுத்திவிட முடியும். குடும்ப உறவுகளில் நானும் ஒருவனாக இருந்து, உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

“வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம்” என்ற அறிஞர் வாக் கிற்கமைய நடந்தவை நடந்துவிட்டதென மனதைத் தேற்றிக்கொள்வோம்!

– என்றும் மறவாத

சு.குணரத்தினம். C.O. (மைத்துனர். கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குல முறை கிளர்த்தல்: ஐயம்பிள்ளை பாலசிங்கம்

ஐயம்பிள்ளை + சொர்ணம்மா
↓
**பாலசிங்கம்**

சிவராமலிங்கம் + மனோரஞ்சினி

இராசையா + தையல்நாயகி
↓
**பத்மாவதி**

குகதாஸ் + பிறேமகுமாரி
யோகநாதன் + தவலட்சுமி
பத்மநாதன் + கலைச்செல்வி
செல்வவதி + இந்திரன்
சண்முகதாஸ் + செல்வநிதி

பாலசிங்கம் + பத்மாவதி
↓


தேவகி + யோராஜா
↓
மதுயன்

வேணுகா + ஸ்ரீகுமார்
↓
மிருணன்

தமிழினி + ராஜ்குமார்
↓
ரஜிந்
ரமீஸ்

தர்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

எங்கள் அன்பிற்கும் பாசத்திற்குமுரிய தந்தையும் பேரனும் எமது நல் வாழ்வுக்கு ஒளி விளக்காய் விளங்கி வழி காட்டிய அமரர். திருவாளர் ஐயம்பிள்ளை பாலசிங்கம் அவர்கள் சிவபதமடைந்த 23.02.2009 நாளன்று தொடக்கம் ஓக்டன் மலர்ச்சாலையில் அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக வைத்திருந்த காலத்தில் அடுத்துவந்து ஆறுதல் கூறியும், பலவழிகளில் உதவி புரிந்தும், 02.03.2009ம் திகதியன்று நடைபெற்ற இறுதிக் கிரிஜைகளில் நேரில்வந்து கலந்துகொண்டவர்களுக்கும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலு மிருந்து மலர்வளையம் அனுப்பியவர்களுக்கும், தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அனுதாபச் செய்திகளைத் தெரிவித்தவர்களுக்கும், அந்தியேட்டி, சபீண்டிகரணக் கிரிஜைகளில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்த அனைத்து நல் உள்ளங்களுக்கும், இந்த மலரை மிகவும் அழகுற வடிவமைத்து, அச்சமைத்துத் தந்த SP Solutions அச்சகத்தாருக்கும், எமது நன்றிப் பூக்கள் உரித்தாகட்டும்.

"ஓம் சாந்தி"

– இங்ஙனம்,

மனைவி, மக்கள், மருமக்கள்

பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ - அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ - அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ - அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய் - எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் - அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய் - அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ - அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ - அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ - அது நாளை
மற்றொருவருடையதாயிருக்கிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.



Designed By: Thaya - 416-669-7450 Printed By: SP Solutions - 416-439-7703

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org